(ஆ) இப்பாதையைச் சீரமைக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) தென் ஆற்காடு மாவட்டம் வானூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள ஒழிந்தியாம்பட்டு—கீழ்ப் புதுப்பட்டு சாலை பழுது பார்க்கப்பட உள்ளது.

(ஆ) வெள்ளநிவாரண நிதி ஒதுக்கீட்டில் இதற்காக ரூ. 92,000 ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(இ) இந்த வேலை விரைவில் துவங்கப்பட்டுவிடும்,

திரு. மொ. பரமசிவம் : தலைவரவர்களே, இந்த வேலை ஒப்படைக்கப்பட்ட கான்ட்ராக்டர் சரியாக வேலை செய்ய வில்லை. அதனால் அந்த கான்ட்ராக்டர் மேல் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவருவர்களே, அது பற்றி குறிப்பு இல்லை. ஆனால் சாலை பழுதடைந்திருக்கிறது என்பதும், அதைச் செப்பனிட ரூ. 92,000 ஒதுக்கப்பட்டிருக் கிறது என்பதும் குறித்த விவரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி இருக்குமானால் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

கோர்வைபுதூரில் முன்னாள் ராணுவ வீரர்களது வீடுகளுக்கு வரி.

*578. வினா—திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் ராணுவ வீரர்கள் குடியிருக்கும் ''கோவைப்புதூர்'' காலனி வீடுகளுக்கு வரி விதிப்பிலிருந்து (Exemption from house tax) விலக்கு அளிக்கவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.